

அஞ்சலி. நாகேஸ்வர ராவ். ராம ராவ். நடித்த

சோபனாசலாவின்

# கிராமப்பெண்

சந்திரா பிக்சர்ஸ், திருச்சி.

# கிராமப்பெண்

## கதைச்சுருக்கம்

---

கிராமதிகாரி புரந்தரய்யாவின் மூத்த மகள் சாந்தா என்பவள். அவள் அக்கிராமத்தில் அழகே உருவெடுத்த ஓவியமாய் திகழ்ந்தாள். எளிய வாழ்க்கையும் உயர்ந்த எண்ணங்களுமே அவளது வாழ்க்கையின் இலட்சியம்.

புரந்தரய்யாவின் தங்கை மகன் வசந்த் என்பவன். அவன் குணக்குன்று. கடமையே அவன் வாழ்வின் இலட்சியம்.

நாகனூர்க்காதிபதியான கெம்பனு என்னும் கரகன் கள்ளத்தனமாகக் கொள்ளையடித்து அச்சுற்றுப்புற கிராமவாசிகளுக்குப் பலவாறு இன்னல்கள் இழைத்துவந்தான்.

ஓர்நாள் தூர்க்கி கிராமவாசிகளை கெம்பன துரையின் துணைவனை ஜயந்த் சில முரடர்களோடு வந்து தாக்கினான். வசந்த் உதவியால் ஜயந்தையும், அவன் ஆட்களையும் எதிர்க்கிறார்கள். ஜயந்த் சாந்தாவால் ஏளனம் செய்யப்பட்டு, அவமதிப்படைகிறான்.

ஜயந்த் தன் ஆட்களோடு கெம்பன துரையை அடைந்து தனக்குற்ற அவமானத்தையும், தோல்வியையும் தெரிவித்து, தன் மனம் நீதியிலும், நேர்மையிலும் நிலைநாடுவதை அவனுக்கு அறிவித்து, அவனிடமிருந்து விலகி தூர்க்கி கிராமவாசிகளோடு சேர்ந்துவிடுகிறான். அக்கிராமவாசிகளுக்கு சுதந்திர உணர்ச்சியும், உடற்பயிற்சியையும் போதித்து அவர்கள் அன்பைப் பெறுகிறான்.

சாந்தா ஜயந்தைக் காதலித்து அவனை மணம் செய்துகொள்ளுகிறாள். அவர்களின் அன்பின் அடையாளமாக ஓர் குழந்தையும் பிறக்கிறது.

இச்செய்திகளைக் கேள்வியுற்ற கெம்பனு சூறாவளியென மாறி அக்குடிசை மக்களைத் தன்புறத்தி ஜயந்தைக் கொல்ல முயற்சிக்கிறான். அவன் முயற்சி வெற்றியுறாமல் போகவே, தன் ஆட்களில் சிலரை உளவனுப்பி, அத்தூர்க்கி மக்கள் தங்கள் திருவிழாவிற்கு திருமலைக்குச் செல்லும் செய்தியை அறிகிறான்.

கெம்பனு ஜயந்தைக் கைது செய்து சிறையில் அடைக்கிறான். சாந்தா, தன்னை முன்பு மணக்க இருந்த வசந்தேதான், தன் கணவனை இக்கதிக்கு ஆளாக்கி இருக்கவேண்டும் என்று நினைக்கிறாள். வசந்த் தன்மேல் ஏற்பட்டுள்ள பழியை நீக்கும்பொருட்டு, ஜயந்தைச் சிறையிலிருந்து மீட்கிறான். கைக்குழந்தையோடு ஜயந்தைத் தேடி அலைகிறாள் சாந்தா. அச்சமயம் தன் கணவன் தன்னைக் கூப்பிடும் சப்தம் கேட்டு கைக்குழந்தையை அந்த இடத்திலேயே விட்டுச் செல்கிறாள். சாந்தா ஜயந்தைச் சந்தித்து மகிழ்கிறாள். அதற்குள் அக்குழந்தையை, அவர்களது விரோதிகள் கவர்ந்துசெல்கிறார்கள்.

கைக்குழந்தையின் கதி என்ன?

வசந்த், சாந்தாவை மறுபடி சந்திக்கிறனு இல்லையா?

குழந்தையைப் பிரிந்த ஜயந்தும் சாந்தாவும் என்ன ஆனார்கள்?

கெம்பனு என்னவாகிறன்?

உங்களின் விரிவான கேள்விகளுக்கு, விளக்கமாக பதில் சொல்லும் உங்களூர் வெள்ளித்திரை.

# கிராமப்பெண்—பாட்டுகள்

## ராகினி

தீர கம்பனு—மஹா வீரகம்பனு
வீரரையன்றி வேறு தெய்வமது இங்குளதோ
எங்குளதோ, கிடையாதலவா!
தரணி வீரரே கம்பனுவின் இணையாகுவரா?
இதுநேருவதா, நடவாதிதுதான் (வீரகம்பனு)

கம்பண தீரனின் பேரைச் சொல்லிடில்
கடகடத்தாடிடுஞ் ஜெகமே
கையினில் சிக்கின சத்துருக்களுக்கே
சிம்மசொப்னமே நிஜமாய், நிஜமே, இதுநிஜமாய் (வீர)

கிறு கிறுத்திரிந்திட மின்னலை கக்கவே
ஓடவும் ஓடவும் தன் எதிரிகளனைவரை
நறுக் நறுக்கென நறுக்கியே போடும்
கம்பனகத்திக்கு கண்களோ உளவென
மெச்சிடுவார், மெச்சிடுவார், பிறர்மெச்சிடுவார்
வீரகம்பனு, தீரகம்பனு
வீரகம்பனு ஜேய், ஜேய். தீரகம்பனு ஜேய், ஜேய்.

## சாந்தா & சசி

சசி: அழகான கொடிகள் ஊடே
விரிவான செடிகள் உள்ளே
முத்தான மணப்பீடமொன்று வரையே
நீதான் ஒன்று வரையே
முத்தான மணப்பீடமொன்று வரையே ஒன்று
வரையே
சிங்கார ஊஞ்சலிலே சீதாராமரே உள்ளாரெனவே
இங்கே நீ மணவிடை ரமணி வரையாய் நீதான்
ரமணி வரையாய்
இங்கே நீ மணவிடை ரமணி வரையாய்
ரமணி வரையாய்

சாந்தா : ஓயம்மா எமையாதரித்திடம்மா
தயைசெய்யம்மா துளசியம்மா எம்மம்மா
வேண்டுவதுன்னருளே இன்று நீ தந்திடே
மகிழ்ந்து நீ மாறாது

கருணை காட்டினால் ஓடிப்போகும் பாபங்கள்
ஓடிப்போகும் ரோகங்கள், போகுமே கஷ்டங்கள்
தயைசெய்யம்மா துளசியம்மா எம்மம்மா
விண்ணுள்ள உனைக்காண

அவகாசமில்லையா லக்ஷிமியல்லவா
தளமொன்று தலைக்கணிந்தால் சுக சம்பத்து இலையா
தயை செய்யம்மா, துளசியம்மா, எம்மம்மா.

## டப்பாம் & லப்பாம்

டப்பாம் : ஹேய், பாமாமணி
குளிர்மிகு தூற்றலால் — துப்பட்டி நனைந்தது
கதவை திறந்திடேன் பாமா கதவை திறந்திடேன் பாமா
சடபுடா சடபுடா (குளிர்மிகு)

லப்பாம் : அர்த்தராத்திரியாரு நித்திரை போகையில்
யாரெனத்திறக்கவோ சாமி—
யாரெனத்திறக்கவோ சாமி

டப்பாம் : கோவர்த்தனகிரி ஆவினைமேய்ப்பவன்
கோபமா நந்தனன் நானே—பாமா
கோபால கிருஷ்ணனும் நானே

லப்பாம் : ஹா நாதா எனக்கென்ன தருவாய்?

டப்பாம் : தகதக்கா, தகதக்கா தகதக, தகதக, தகதக, தகதக,
தகதகமின்னிடும் தத்தம் வளையல்
உனக்கெனத்தருவேனே—பாமா
உனைக்காண வந்தேனே—நானே

லப்பாம் : மந்தரகிரிதர சுந்தர வடிவினு
மதனன் தந்தை வாவேன் கிட்ணு
மதனன் தந்தை வாவேன்—2

டப்பாம் : வண்ண அழகியுன் கண்ணனிடந்தான்
இந்த மோடிகள் ஆமா பாமா
இந்த மோடிகள் ஆமா
வண்ண அழகியுன் கண்ணனிடந்தான்
இந்த மோடிகள் ஆமா பாமா
இந்த மோடிகள் ஆமா, பாமா, ஆமா, ஆமா அம்மா

## சாந்தா & வசந்த் & கூட்டம்

சாந்தா : கிளிகள் நீங்கள்—எலிகள் நீங்கள் ஒப்பனுவை நீங்கள்
போ போங்கள்—போய்த்தீருங்கள்
தூர தூரமாய்ப் போங்கள்
ஓ... அறிவிலாத புழுவாகும் நீங்கள்
கிட்டவே வராதீர், முடிவினை அடையாதீர்
போ போங்கள், போய்தீருங்கள்
உடலினைப்பிழிந்து உழைத்திடுவதனுல்
வியர்வை கொட்டுவோம், நாமே சிரமத்தினில்
கூட்டுவோம்
வீட்டினிற்பாதியும் கண்ணினில் இமையாய்
காத்திடும் பயிர்தான் பொன் பயிரே
காத்திடும் பயிர்தான் பயிரே (போ போங்கள்)

வசந்த் : காய்ந்திடுகின்ற வெய்யில் அதிலே—
கண்டவர் வியக்கும் கஷ்டஞ்செய்து
பயிர்செய்தோமிப்பயிரினையே
தண்டத்தீனிக்கு வராதீர், தண்டத்தீனிக்கு வராதீர்

கூட்டம் : மண்ணில் மண்செய்—செடியில் செடியாய்
பிறந்தோமிங்கே வளர்ந்தோமே—நாமே
பிறந்தோமிங்கே வளர்ந்தோமே
கெட்டியாய் ஏரினை பிடித்துகையால்
பிழைக்கு மெமக்கு குறையேது
காத்திடுமம்மைக்கு இணையேது, இணையேது
(போ போங்கள்)

சாந்தா : அவர்தர்மமதில்—இவர்தர்மமதில்
கொழுத்திடதினந்தின்று உடல்பெருத்து—நீர்
கொழுத்திடதினந்தின்று உடல்பெருத்து

போரினில் விழுந்து பயிரை மேய்ந்துமே
வீணாய்ப்புசித்துத்திரிவீரோ—
விணாய்ப்புசித்துத்திரிவீரோ (போ போங்கள்)

சசி : ஆயாஸத்தில்—உல்லாசத்தில்
நம் உல்லாஸத்தில்
அம்மைக்கு நாமே — நமக்கு அம்மா

கூட்டம் : அம்மா...................
அம்மா என்றால் ஆனந்தமாக
ஆவெனப் பேசிடும் — நம் நாடு
நம் நாடு, நம் நாடு

## டப்பாம் & லப்பாம்

ஓம் தூம் தாம் கர்லே
கடாமஹாட்மே - சாந்த்பீகங்கா
சர்ப்பராஜ் ஸஜ்ஜன்குமாலா
கலமேகண்டா பலேசஞ்சகி
பம் பம் பம் பம் பாஹூசடாவே
தஹல்ஜமாரே ஏக்ஞான்கர்
கேசரி பூசரி கேல்கிபர்மா
கன் கன் கன் கன் கடேஸன்ஞகி
மம் மம் மம் மம் மந்த்ராதந்த்ரகே
கஜலக்ஷிமி ஓகண்டாலக்ஷிமி
லக்ஷிமிகாந்தன், லங்காதின்தின்கே
அவுர்சஞரே ரங்கமால்மே
படேமடாவே, தடீசுவாவி, படேயவாலி
வாகோ, வீகோ, ஜபல்தாரோ
தாம் தூம் மேக்க கர்ஜனி
கசிபிசி கண்டா, கஞதுரே
அகட்டம் லகட்டம்
தாம்தூம் கரோதடர் - தடாகேஜெனபத் காஞ
ராமா மாரே ராக்ஷஸிமர்கயி, ராவணமர்கயி

## சாந்தா

சாந்தா : பாருங்கிருமந்தான்—அழகாமே ஆனந்தமே ஓஹோ
பிரீய ஜீவிதமிதுவே காணீர் (பாருங்)

நெற்றியில் குங்குமஞ்சேர சுற்றிய சுங்கிடிச்சேலை
நீருள குடத்தை ஏந்திப்போவார்
பருவப்பெண்களே அழகாக—
பருவப்பெண்களே அழகாக
ப்ரீய ஜீவிதமிதுவே காணீர் (பாருங்)

பச்சைப்பசிய நிலை—பயிரதன் அழகதே
ரயத்துக்கே ஆனந்தம், ஆனந்தம்.

சிறுபுல்லினை அசைபோட்டிடு ஆவின் அழகதுவே
கோபாலருக்கானந்தமே—ஆனந்தம்.
நீராடித்துறையிருந்து, நீர்க்குடங்கொணர்தலே
பெண்களுக்கானந்தம், ஆனந்தம்.
பூதேவி நினைவிலே
கோதேவி பூஜையிலே

கள்ளங்கபடமில்லாத—களியாகும்
ஜீவிதமே, களியாகுஞ்ஜீவிதமே (பாருங்)

## வசந்த்

சாந்தா போல பெண்ணே—இல்லை இல்லை
ஜகமெல்லாம் தேடினும் கிடையாளே,
கிடையாளே—எங்கும் கிடையாளே (சாந்)

மனது மெத்தெனும் வெண்ணெய்
குணமே உயர்ந்திடும் பெண்ணே
குணமே உயர்ந்திடும் பெண்ணே
கர்வமில்லை—கன்னிகை ரூபத்துக்கெல்லை (சாந்)

முற்றிலும் நேரிய பேச்சு—
நியாயமென்றே அறிவான்

என் கண் இனித்திட ஆடல் பாடல்
நிஜமே பேசிடும் பூவை (சாந்)

## டப்பாம், ஜயந்த் & சாந்தா

டப்பாம் : பாய்ச்சிடீர் ஓடையில் நீரதை ஓடையில்

ஜயந்த் : நீரோட எத்தமும் சுதிகலந்து பாடணும்
பாட்டுப் பாடணும்

பாட்டிலே கஷ்டங்கள், கோட்டை மண்ணோடு
போயி மறையணும்

டப்பாம் : ஓ......ஹேய்
ஓடியே நடக்கணும் பாய்ச்சணும்

ஜயந்த் : நீர்மிஞ்சிப் புலமெல்லாம், நிறஞ்சுபோகணும்
எற்றத்தின் மகிமையின்னு
ஏதென்று சொல்ல

பாதாள கங்கையை—இங்கே கொண்டாரணும்

சாந்தா : ராமனேத்தமேறி ராகங்கள் பாட

ஜயந்த் : சீதம்மை தன்னைமறந்து வெக்கத்தில் காண

சாந்தா : தெய்வங்கள் கண்டிதை, தைதக்க ஆட

ஜயந்த் : புலம்பக்குவ சிறு பயிரதோட

சாந்தா } ஜயந்த் } ஆடிக் கிணற்றிலுள்ள பிரேம ராகங்களை
பிரேம பாவங்களை

பிரியத்தோடு மேல் வாங்கி—
பாட்டுப் பாடணும்

ஜயந்த் : நீரோட

சாந்தா : நீரோட

இருவரும் : நீரோட எத்தமும் சுதிகலந்து பாடணும்
பாட்டுப் பாடணும்

## டப்பாம், சுகுணு, சாந்தா & கூட்டம்

டப்பாம் : என் உண்மை சக்தியை கண்டாயா

சுகுணு : ஹா......

டப்பாம் : என் தெம்புலாக வந்து மகிழ்ந்தாயா

சுகுணு : ஹா......

டப்பாம்: ஓ குலுக்குகாரி, மின்னல் கொடியாள்
வாயேன் நீதானே - ஆஹா வாயேன் அணைவாயே

சுதுனு: உன் உண்லம சக்தி தானினிய ரொட்டி
தினந்தின்பது தானலவா, என்னை மகிழச்செய்ய
உன் அப்பன் தாமா உனக்கொங்குவேனோ - நானே
ஓ கூச்சல்காரா, பைத்தியக்காரா, போடா
மடையா நீ வாயினை அடைத்திடு பேசாதே

சாந்தா: ஊதடா ஊதடா விஜய சங்கமூதடா

கூட்டம்: விஜய சங்கமூதடா

சாந்தா: பட்டிகெடுத்திட்டாரே—தேசத்துரோகியென்று

கூட்டம்: துரோகி என்று கொட்டடா [கொட்டடா

சாந்தா: பட்டிக்காடு தேசத்திற்கு பற்றுக்கொம்படா

கூட்டம்: ஆஹா பற்றுக்கொம்படா

சாந்தா: பட்டிமுன்னே பட்ணமென்ன திருஷ்டிபொம்மையே

கூட்டம்: ஆஹா திருஷ்டிப்பொம்மையே

சாந்தா: ஒருவர் ஜோலிக்குப்போகோம்—எம் ஜோலிச்கு வராதே

கூட்டம்: எம் ஜோலிக்கு வராதே, எம் ஜோலிக்கு வராதே

சாந்தா: பூ நிகர்த்த பட்டிக்காட்டை புலியாய் செய்வதேனோ

கூட்டம்: புலியாய்ச் செய்வதேனோ

சாந்தா: பரதமாதா மேலாவது பட்டியாலேயே

கூட்டம்: கேட்பாய் பட்டியாலேயே

சாந்தா: பட்டிபோன்ற தேசமாதா பற்றினில் நமக்கு நலமே

கூட்டம்: ஆஹா பற்றினில் நமக்கு நலமே

சாந்தா: குயில்களறியுமெப்பாட்டு
கிளிகளறியுமெம்பேச்சு
மாயை மர்மமில்லாத மனசுகள்
பச்சை நீருக்கு நேரே—ஆஹா
பச்சை நீருக்கு நேரே.

## சசி & சாந்தா

சசி : இனிதான பாப்பா நீ சின்ன பாப்பா நீ
இளநகையிலே முத்துக்கொட்டவாராயோ
குடியம்மாகுடியே—எட்டிகாய்ச்சிய பாலினை
சம்பங்கி மொட்டுகள் நீராருங்கண்களே
ஓ லாலம்மா லாலா ஓலால பால லால
லலலா லலலா ஆயி

சாந்தா : பால் சமுத்திரத்துமேலே பாலசந்திரனேயாக
படுத்திட்ட என்தந்தாய் பாட்டுப்பாடுவேன் ஜோ ஜோ
கரிய வண்டுகள் நிகர்த்த கண்களென்ன மாயைடா
செப்பிடுங்கனவெல்லாங் காட்டுவாய் நீயே ஜோ ஜோ.

## டப்பாம், லப்பாம் & சீதா

டப்பாம் : எதுக்குடா, போ, போ – மணம்எதுக்குடா சொல்வாய்
மனையாள் பீடையே அறியாய்
எந்தமூடன் மணந்து கொண்டு—
குத்துசண்டை செய்வானோ
நேரம் போதேயின்றி மூனே—
முளுக்கமோசம் போகாதே

லப்பாம் : குருவே............

டப்பாம் : ஹூம், எதுக்குடா போ போ, மணம் எதுக்குடா
சொல்லாய்
மனையாள் பீடையே அறியாய்

லப்பாம் : சொகுசுக்குள்ளே சொக்கிப்போனேன்
அதிகபிரேமை யாகிப்போனேன்
எதுக்கென்றால் இப்போ நீதானே – ஓ குருவே
தடுத்திடவே இப்போ ஆவதா
அழகு மாது கிடைச்சுப்போச்சு—
வரிசை நல்லா நின்னுபோச்சு
எதுக்கென்றால் இப்போ நீதானே – ஓகுருவே
தடுத்திடவே இப்போ ஆவதா குருவே.........

டப்பாம் : மெள்ள மெள்ள வருவாளே தலைக்குமேலே ஏறிடுவாள்
அங்கசைந்திடில், இங்கசைந்திடில்
ஆ என்றால், ஊ என்றால்
அத்திரி உன் அப்பனென்று—
நொறுக்கியே போட்டிடுவான் (எதக்)

சீதா : ஓ அறிவில்லாதகுருவே – ஓ குரங்குமூஞ்சி சிஷ்யா
எதுக்கென்றே யொருவன் – ஆஹா தேவை யென்றே ஒருவன்
எதுக்கென்ன கூப்பிட்டால் - வருவதற்காக காத்திருக்கா

லப்பாம் : நீதானே............

சீதா : வரிசைகெட்ட பெண்ணு அல்ல நான்
சொகுசு கண்டு வருவாளா – உன் திறனைகண்டு வருவாளா?
வெட்கங்கெட்டமுட்டாளே—குப்பை காட்டு நாயே நீர்
இப்ப ஓடிப் போயிடுங்க

## குருடன்

கண்ணில்லாத கபோதி நான்
உள்ளமே பற்றியே பொசுங்குதென்றால்
காண்பதே இல்லையா ராமா
இரக்கமே இன்னும் இல்லையா ராமா
உள்ளமட்டுமிதுதான் வில்லையா
கண்ணில்லாத இக்கபோதியாக—
எந்நாளிருக்கணும் ஓ ராமா
தருமமே இல்லையா ராமா

## லப்பாம் & டப்பாம்

லப்பாம் : பலவந்தமாக சர்ப்பமே
சிற்றெறும்பு கையில் சிக்கி
அல்வா பக்கோடா—உன்
யாத்திரை படர்வோம் வாடா
நடடா போடா
தகிங்கிண தகா......

டப்பாம்: தோம் ததிங்கின தகா

இருவரும்: உன் யாத்திரை படர்வோம் வாடா
நடடா, போடா

## பின்னணி கீதம்

தன்யாத்மா ஜே ஜே
மஹாத்மா ஜே ஜெய், ஜே (தன்)
மானிட சேவை மஹா தர்மமென
சாவினில்கூட காட்டினை நீ
உனதே தியாகம்—
உனதே பிரேமை
உலக மாந்தரின் குருவும் நீயே
கிராம ஜீவனமே—மேலது என்றே
நீ நன்றாய் எம் செவியில் முழக்கினை
கிராம வாழ்க்கை உத்தமமாமே
வாருங்கள் மகிழ்ந்தே கூடுங்கள்.

வணக்கம்.

தியோடர் பிரிண்டிங் & லித்தோ ஒர்க்ஸ், திருச்சிராப்பள்ளி.

# கிராமப் பெண்

தமிழ் படம்

— நடிகர்கள் —

★

நாகேஸ்வரராவ் — வசந்த்

N. T. ராமராவ் — ஜயந்த்

A. V. சுப்பராவ் — கெம்பனு

S. V. ரெங்கராவ் — தாத்ரா

கோடீஸ்வரராவ்— மார்தாண்ட்

ராமமூர்த்தி — லப்பாம்

சேதுராமய்யா — டப்பாம்

காடப்பள்ளி ராமய்யா — புரந்தரய்யா

— நடிகைகள் —

★

அஞ்சலிதேவி — சாந்தா

லெக்ஷ்மிகோன்டா — ரஜினி

பாலசரஸ்வதி — ஷாம்பா

பேபி மல்லிகா — சாசி

ஹேமலதா — வசந்தத்தின் தாயார்

★ கனகம், சீதா முதலியோர்களும் ★

| | | |
|---|---|---|
| காமரா படப்பிடிப்பு | .... | D. S. கோட்னிஸ் |
| ஒலிப்பதிவு சவுண்ட் | .... | M. B. வால்கா |
| மேக்கப் | | K. கோபால ராவ்<br>K. நாகேஸ்வர ராவ் |
| நடனம் | .... | வேதாந்தம் ராகவையா |
| ஆர்ட் | | T. V. S. சர்மா<br>வல்லே |
| எடிட்டிங் | .... | K. ஸ்ரீராமுலு |
| சங்கீதம் | .... | M. ரெங்கராவ் |
| செட்டிங்ஸ் | .... | M. V. செங்கையா |
| மோல்டிங்ஸ் | .... | N. C. கார்த்திகேயன் |
| புரொடெக்ஷன் எக்ஸிகியூட்டிவ் | .... | M. ராமச்சந்திரன் |
| டைரக்டர் | .... | B. A. சுப்பராவ் |

★

ஸ்டுடியோ

**சோபனசாலா**

★

ப்ரட்யூஸ் செய்தது

**ஸ்ரீ ராஜா சாஹேப் மிர்ஸாபூர்**

★

**R. C. A. ஒலிப்பதிவு முறைப்படி ரிக்கார்டானது**